# தென்னாசியாவில் தேசத்தினைக் கட்டியெழுப்புதல்: ஒரு விமர்சன பகுப்பாய்வு

# Nation Building in South Asia: A Critical Analysis

**Mr. MAM. Fowsar**

Department of Social Sciences, South Eastern University of Sri Lanka
(fowsarmam@seu.ac.lk)

**ஆய்வுச் சுருக்கம்**

*தேசத்தினைக் கட்டியெழுப்புதல் என்ற பதம் மேற்கு சமுகத்தில் அதிகம் செல்வாக்குப் பெற்றதாகும். எனினும் அதன் இயல்பினைப் பொறுத்து அது மிகச் சிக்கலானதும் கஷ்டமானதுமான செயன்முறை. அபிவிருத்தியினை எட்டிய பல நாடுகளில் அது நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னரே சாத்தியமானது. இதன் அடிப்படை நோக்கம் மரபுரீதியான அடையாளங்களை அழித்துவிட்டு புதிய தேசிய அடையாளத்தை உருவாக்குவதாகும். தென்னாசிய அரசுகள் போன்று பல்லின சமுகம் ஒன்றில் தேசத்தினைக் கட்டியெழுப்புதல் என்பது வேறுபாடுகளுக்கிடையே ஒரு பொதுமைப்பாட்டினை உருவாக்கிக் கொள்வதைக் குறித்து நிற்கின்றது. பொதுமைப்பாட்டுக்கு முரணாக வேறுபாடுகள் வெளிப்படும் போது தேசத்தினைக் கட்டியெழுப்புதல் செயன்முறை குழப்பத்துக்குள்ளாகின்றது. அதேவேளை தேசத்தினைக் கட்டியெழுப்புதல் அரசினைக் கட்டியெழுப்புவதனூடாகப் பெற்றுக் கொண்ட அதிகாரத்தினை தேசிய அடையாளம் அல்லது தேசிய கலாசாரத்தினை உருவாக்குவதற்காகப் பயன்படுத்துவது என்ற அர்த்தத்திலும் விளக்கப்படலாம். இச்செயன்முறையின் செயற்பாட்டுத் தன்மைமிக்க இருத்தலின் மூலம் மக்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்படுவது மட்டுமல்லாமல், குறித்த மக்கள் தொகுதிக்கு புதிய அடையாளம் தோற்றுவிக்கப்படுகின்றது. எனினும் வளர்முக நாடுகளைப் பொறுத்தவரையில் இச்செயன்முறை மிகுந்த சிக்கலுக்குள்ளாகியுள்ளது. அதிலும் குறிப்பாக காலணித்துவச் செயற்பாடுகள் உள்ளடங்கலான இதர காரணிகளின் தாக்கத்தினால் தென்னாசியாவில் தேசத்தினைக் கட்டியெழுப்புதல் நெருக்கடிகளுக்குள்ளாகியுள்ளது. அந்நெருக்கடிகள் குறித்த பண்புசார் முறையிலமைந்த சிறு பகுப்பாய்வொன்று இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளது.*

***பிரதான சொற்கள்:*** *தேசத்தினைக் கட்டியெழுப்புதல், பன்மைத்துவ சமுகம், இனத்துவ அரசியல், உப-தேசியவாதம், பிரிவினைவாதம்*

**அறிமுகம்**

தேசத்தினைக் கட்டியெழுப்புதல் எண்ணக்கரு அரசியல் ஆய்வுக் கலந்துரையாடலில் முக்கிய இடத்தினைப் பிடித்துள்ளது. இது பல தன்மையான சமுகங்களை, பிரதேசங்களை, குழுக்களை ஒரு தேசிய அரச முறைமைக்குள் உள்ளீர்க்கும் ஒரு செயன்முறையாகும் (Morrison, 1989). அரசியல் விஞ்ஞான இலக்கியங்களில் தேசத்தினைக் கட்டியெழுப்புதல் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள அரசுகளில் அரசியல் நிறுவனங்களைக் கட்டியெழுப்புதல் (Huntington, 1969) என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்புதிய நிறுவனங்கள் பிரஜைகளின் அரசியல், சமுகத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வழியில் தேசத்தினைக் கட்டியெழுப்புதல் என்பது நிறுவனக் கட்டுமானம் எனப்பொருள் கொள்ளப்படலாம்.

எனினும் தேசத்தினைக் கட்டியெழுப்புதல் வெறுமனே நிறுவனக் கட்டுமானத்துடன் தொடர்புடையதொரு எண்ணக்கரு மட்டுமல்ல. அது மரபுரீதியான அடையாளங்களை அழித்துவிட்டு புதிய தேசிய அடையாளத்தை உருவாக்குவதையும் குறித்துநிற்கின்றது. தென்னாசிய அரசுகள் போன்று பல்லின சமுகம் ஒன்றில் தேசத்தினைக் கட்டியெழுப்புதல் என்பது வேறுபாடுகளுக்கிடையே ஒரு பொதுமைப்பாட்டினை உருவாக்கிக் கொள்ளுதல் என வரைவிலக்கணப்படுத்தப்படலாம்.

இத்தகைய கோட்பாட்டுப் பின்புலத்தில் நின்று தென்னாசியப் பிராந்தியத்தினை நோக்குகையில், இப்பிராந்தியம் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், வங்காளதேசம், பூட்டான், நேபாளம், மாலைதீவு, ஆப்கானிஸ்தான் ஆகிய எட்டு அரசுகளை உள்ளடக்கியுள்ளதுடன் சர்வதேச பரப்பில் மிகுந்த கவனஈர்ப்பினைப் பெற்றுவருகின்றது. மிக நீண்டகால வரலாற்றினைக் கொண்ட இப்பிராந்தியம் சமுக, பொருளாதார, அரசியல் அபிவிருத்தியில் பின்தங்கிய நிலையில் உள்ளது. இப்பிராந்தியத்தினை சூழ்ந்திருந்த பல நூற்றாண்டுகால காலணித்துவ ஆட்சி

இந்நாடுகளில் நவீன ஆட்சி முறைக்கு வித்திட்ட போதிலும் அவற்றின் அரசியல் கலாசாரம் இன்னும் முதிர்ச்சியுறாத நிலையிலேயே உள்ளது.

சுதந்திரத்திற்குப் பிந்திய யுகத்தில் தேசத்தினைக் கட்டியெழுப்புதல் தளர்வுற்றிருப்பதனால் புதிய தேசிய அடையாளத்தினூடாக உருவாக்கப்படும் ஐக்கியம் இந்நாடுகளின் நீண்டகால எதிர்பார்க்கையாக மட்டுமே உள்ளது. வெற்றிகரமான தேச நிர்மாணத்திற்கு உதவும் ஜனநாயக நிறுவனங்கள் பல இந்நாடுகளில் சிதைவுற்றுள்ளன. இராணுவ ஆக்கிரமிப்பு, உள்நாட்டுக் கிளர்ச்சிகள் போன்றன ஜனநாயகத்தை சிறப்பாக பேன முடியாதவாறு தடைவிதித்துள்ளதுடன் உறுதியான தேசிய அரசினை கொண்டுநடத்துவதில் அவை தொடர்ச்சியான இடைஞ்சல்களை ஏற்படுத்துவருகின்றன. அதேவேளை இந்நாடுகளில் நிலவும் வளப்பற்றாக்குறை, பொருளாதார வீழ்ச்சி, வறுமை ஆகியன உறுதியான அரசியல் முறைமையினைப் பேணுவதில் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன (சிவராஜா, 2001).

இந்நதவகையில் தேசத்தைக் கட்டியெழுப்புதல், அரசைக் கட்டியெழுப்புதல் மற்றும் அரசியல் உறுதிப்பாட்டினைப் பேணுதல் என்பன தென்னாசிய அரசுகளுக்குரிய முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளதனை அவதானிக்கலாம். எனினும் இவ்வாய்வு தேசத்தினைக் கட்டியெழுப்புவதில் தென்னாசிய அரசுகள் எதிர்கொள்ளும் பிரதான நெருக்கடிகளில் மட்டும் கவனம் செலுத்துகின்றது.

**ஆய்வு முறை**

இவ்வாய்வு இரண்டாம் நிலைத்தரவுகளை பிரதானமாகக் கொண்ட பண்புசார் ஆய்வாகும். ஆய்வுக்கான தரவுகள் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தள குறிப்புக்கள் என்பவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன. எனினும் நேரடி அவதானத்தின் மூலம் பெறப்பட்ட முதலாம் நிலைத் தரவுகளும் ஆய்வில் எடுத்தாளப்பட்டுள்ளன. ஆய்வின் பகுப்பாய்வு முடிவுகள் விபரண முறையில் தரப்பட்டுள்ளன.

**பகுப்பாய்வும் முடிவுகளும்**

தென்னாசிய அரசுகள் நீண்டகால காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுபட்டு சுதந்திர தேசிய அரசுகளாக பரிணமித்தது இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பிந்திய தசாப்தத்திலாகும். பன்மைத்துவ சமுகக் கட்டமைப்பில் ஜனநாயகத்திற்கான போராட்டம், பிரிவினைவாதம், இராணுவமயமாக்கம் போன்ற அரசியல் நெருக்கடிகளை நாளாந்தம் எதிர்கொள்ளும் இவ்வரசுகள், மரபுரீதியான அடையாளங்களை தவிர்த்து புதிய தேசிய அடையாளத்தை உருவாக்குவதில் நெருக்கடிகளைச் சந்தித்துவருகின்றது. பன்மை சமுக அமைப்பில் வேறுபாடுகளுகளைக் கழைந்து பொதுமைப்பாட்டினை உருவாக்குவது தென்னாசிய அரசுகளைப் பொறுத்தவரையில் சிக்கலான ஒரு விடயமாக மாறியுள்ளது. இதற்கான அடிப்படைக் காரணங்களாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்த முடியும்:

1. ***பன்மைத்துவ சமுகக் கட்டமைப்பு:*** பன்மைத்துவ சமுகங்களில் தேசத்தினைக் கட்டியெழுப்புதல் சிரமமானதாகும். இச்சமுகங்களில் காணப்படும் சாதி, வர்க்க, இன, மத, மொழி மற்றும் கலாசார பல்வகைமைகள் இனத்துவ சமுகங்களுக்கு மத்தியில் ஒருமைப்பாட்டு உணர்வினை வளரச் செய்வதனைத் தடுக்கின்றது. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் போன்ற தென்னாசிய நாடுகளில் தேசத்தினைக் கட்டியெழுப்புதல் சவால்களுக்குள்ளாகியுள்ளமைக்கு இந்நாடுகளில் உள்ள பன்மைத்துவ சமுக அமைப்பு பிரதான காரணமாகும்.

2. ***உப-தேசியவாத அடையாளங்கள்:*** தற்கால தென்னாசிய அரசுகள் எதிர்கொள்ளும் புதிய சவாலாக உப-தேசியவாதக் கிளர்ச்சியினை அடையாளப்படுத்தலாம். தேசங்களுக்குள் புதிய தேசங்களை உருவாக்கிக் கொள்வதனையே உப-தேசியவாதம் என்பர். சமுகப் பல்வகைமை அம்சங்கள் சமுகத்தில் புதிய தேசிய அடையாளங்களை உருவாக்கிவிடுவதால் உப-தேசியவாதச் சிந்தனைகள் எழுச்சியடைகின்றன. இவ்வம்சம் தென்னாசிய அரசுகளில் ஒரு தேசிய அடையாளத்தினை குறித்த அரசிற்குள் கட்டியெழுப்புவதனை பாதிக்கச் செய்கின்றது.

3. ***அரசியல் நெருக்கடிகள்:*** தென்னாசியாவில் தேசத்தினைக் கட்டியெழுப்பும் செயன்முறைக்கு தடையாக உள்ள பிறிதொரு காரணி தொடர்ச்சியான அரசியல் நெருக்கடிகளாகும். அரசுகளில் நிலை கொண்டுள்ள அரசியல் சிக்கல்கள் அவ்வரசுகள் வெற்றிகரமான தேசிய சமுக, பொருளாதார, அரசியல் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதிலிருந்தும் அவ்வரசுகளைத் தடுக்கின்றன. அதேவேளை அரசியல் ஆதாயம் தேடும் முயற்சிகளால் தேசத்தினைக் கட்டியெழுப்பும் செயன்முறை பாதிக்கப்படுகின்றது.

4. ***வன்முறையும் அநீதியும்:*** தேசத்தினைக் கட்டியெழுப்புவதில் பாதிப்புச் செலுத்தும் அடுத்த முக்கிய காரணி வன்முறையும் அநீதியுமாகும். தேசத்தினைக் கட்டியெழுப்பல் என்பது பல்மைத்தன்மையான சமுக, பொருளாதார, அரசியல் அமைப்பில் ஒருமைத் தன்மையினை அல்லது ஒரு தன்மையான அடையாளத்தினை வேண்டி நிற்கின்றது. இவ்வம்சம் சமுக வன்முறை மற்றும் சமுக ரீதியாகக் காட்டப்படும் பாரபட்சங்களால் பாதிக்கப்படுகின்றது. சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில் தேசத்தினைக் கட்டியெழுப்புதல் செயன்முறை தோல்வியடைந்திருப்பதற்கு இவ்வம்சமே பிரதான காரணமாகும்.

5. ***பிரிவினைவாதம்:*** இயல்பிலேயே பிரிவினைவாதம் குறித்த அரசுக்குள்ளான தேசிய அடையாளத்தில் சிதைவினை வேண்டுகின்றது அல்லது புதிய தேசிய அடையாளம் ஒன்றினை பிராந்திய, இன ரீதியில் உருவாக்க முனைகின்றது. இவ்வம்சம் குறித்த அரசிலிருந்து பிரிந்து செல்லுதலையும் உள்ளடக்கியுள்ளது. இதனால் தேசத்தினைக் கட்டியெழுப்புவதற்கான அடுத்து முக்கிய பிரச்சினையாக பிரிவினைவாதத்தினைக் குறிப்பிட முடியும். பிரிவினைவாதம் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற தென்னாசிய அரசுகளின் தேசிய ஒருமைப்பாட்டுக்கு சவால்விடும் பிரதான காரணியாக மாறியுள்ளது.

6. ***இனத்துவ அரசியல்:*** சமுக ஒருமைப்பாட்டினை சிதைக்கின்ற காரணிகளுள் இன மைய அரசியல் பிரதானமானதாகும். இவ்வரசியல் சமுகத்தில் அரசியல் ஒருமைப்பாடற்ற தன்மையினை உருவாக்கிவிடுகின்றது. இதன் போது அரசியல் குறித்த இனத்தினை மையப்படுத்தியதாக இருப்பதால் குறித்த இனத்தின் மேலான்மையினையே அவ்வரசியல் வெளிப்படுத்தவரும். இப்போக்கு ஒத்த தேசிய அடையாள உணர்வில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

7. ***தேசியக் கட்சிகளின் நிலை:*** ஒரு அரசில் தேசிய ஒருமைப்பாட்டினை நிலைநிறுத்தி தேசக் கட்டுமானத்தினை செயலுள்ளதாக்குவதற்கு வலுவான தேசியக் கட்சி முறை இன்றியமையாததாகும். இங்கு தேசிய கட்சிகள் என்பது தேசிய ரீதியில் செயற்படும் கட்சிகள் என்ற வகையில் மட்டுமல்லாது இன, வர்க்க ரீதியான வேறுபட்டு அம்சங்களை கடந்த தேசிய நலனை முன்னிறுத்திய கட்சியின் இருப்பினைக் குறிப்பதாகும். தென்னாசிய அரசுகளைப் பொறுத்தவரையில் அவ்வரசுகள் பல தேசியக் கட்சிகளைக் கொண்டுள்ள போதிலும் அக்கட்சிகள் குறுகிய இனத் தேசியவாத, வர்க்க உணர்வுகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

**முடிவுரை**

தேசத்தினைக் கட்டியெழுப்புதல் சிக்கலானதொரு செயன்முறையாயினும் தேசிய அரசுசொன்றின் நீண்டகால இருத்தலுக்கு அது இன்றியமையாததாகும். இச்செயன்முறையினை வெற்றிகரமானதாக மாற்றுவதற்கு தென்னாசியா அரசியல்சார்ந்ததும் அரசியல்சாராததுமான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. எனினும் தென்னாசிய அரசுகளுக்கு இயல்பாக அமைந்த அதன் பன்மைத்துவ சமுகக் கட்டமைப்பு, தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் உப-தேசியவாதக் கிளர்ச்சிகள், அரசியல் நெருக்கடிகள், வன்முறை, அநீதி, பிரிவினைவாதத்திற்கான போராட்டம், இனத்துவ அரசியல், முதிர்ச்சியற்ற தேசிய அரசியல் கட்சிகள் என்ற காரணிகள் இந்நாடுகளின் தேசத்தினைக் கட்டியெழுப்புதல் செயன்முறையில் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்திவருகின்றது.

இந்நெருக்கடிகளுக்கு உள்ளிருந்து வெளியே செல்வதற்கு விட்டுக்கொடுப்புடன் கூடிய பரந்த செயற்றிட்டத்தினை இவ்வரசுகள் கடைப்பிடிக்க வேண்டும். இதற்கான தெளிவான தேசிய கொள்கை வேலைத்திட்டம் அவசியமாகின்றது. இதன் மூலம் பிரஜைகள் தெளிவுபடுத்தப்பட்டு சமுக நீதியின் அடிப்படையில் அரசியல் முறைமையினை கட்டமைக்க முடியும். தென்னாசிய அரசுகள் உப-தேசிவாதக் கிளர்ச்சியினைக் கொண்டிருப்பதால் பிராந்திய அலகுகளுக்கான அதிகாரப் பகிர்வில் அவை துரித கவனம் செலுத்தவேண்டும்.

அதேவேளை அரசியலில் சமயம், இனம் பெற்றுவரும் முக்கியத்துவத்தினை இழிவலாக்குதல், மக்கள் பங்கேற்புடன் கூடிய அரசியல் முறைமைக்கு ஊக்கமளித்தல், சகல சமுக வகுப்புக்களையும் கட்டுப்படுத்தத்தக்க பொதுவான சட்டத்தினை நடைமுறைப்படுத்தல், தேசிய வளத்தினை சமமான வகையில் பகிர்ந்தளித்தல், அரசியல் நிறுவன மற்றும் யாப்புச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல், பொதுவான கலாசாரம், தேசிய அடையாளம் என்பவற்றினை ஏற்படுத்துதல் போன்ற வழிகளின் ஊடாக தேசத்தினைக் கட்டியெழுப்புவதில் தென்னாசிய அரசுகள் குறிப்பிடத்தக்க வெற்றியினைக் காணமுடியும்.

**உசாத்துணைகள்**


1) Bhargave, K.K., Sridhar.K.Khatri, (ed). 2002. **South Asia 2010- Challenges & Opportunities**. Konark Publishers Pvt Ltd,Delhi.

2) Huntington, S. P. 1969. **Political order in changing societies**. NewHaven, CT: Yale University Press.

3) Morrison, D. G. 1989. **Understanding Black Africa: Data and Analysis of Social Change and Nation-building**. New York: Irvington.

4) Pai Panandiker, V.A. 2000. **Problems of Governance in South Asia**. New Delhi: Konark Publishers Pvt. Ltd.

5) Silva,K.M.De, G.H.Peiris, S.W.R.De, A Samarasinhe (ed). 2002. **Corruption in South Asia: India, Pakistan & Sri Lanka**. Kandy: International Center for Ethnic Studies.

6) Silva.K.M.De, (ed). 2000. **Conflict and Violence in South Asia**. Kandy: International Center for Ethnic Studies.

7) சிவராஜா, அ. 2001. **தென்னாசிய அரசியல் ஓர் அறிமுகம்.** கொழும்பு: குமரன் பதிப்பகம்.